	மத்திய இளநிலைக் கல்விக் கழகம்	
	விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி – 2023	
	வகுப்பு : 10 தமிழ் - 006 மொத்த மதிப்பெண்கள் : 80	
	• இருபத்து ஏழு (27) மதிப்பெண்களுக்குக் கீழ் பெறக்கூடிய விடைத்தாள்கள் தேர்வாளரின் ஒப்புதலுக்குப் பிறகே பதிவு செய்ய வேண்டும்.	
	• மதிப்பெண்கள் விடைத்தாளின் வலப்பக்கத்திலும் மொத்த மதிப்பெண்கள் விடைத்தாளின் இடப்பக்கத்திலும் வட்டத்திற்குள் தெளிவாக எழுதுதல் வேண்டும்.	
	• விடைத்தாளின் இறுதியில் தேர்வாளரின் கையொப்பம், எண், மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் குறிக்கப்பட வேண்டும்	
	• பெற்ற மொத்த மதிப்பெண்களை வட்டமிடுக	
	• புள்ளி விவரங்களுக்காக ஒவ்வொரு நாளும் மதிப்பீடு செய்யும் விடைத்தாள்களின் மதிப்பெண்களை மட்டும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்	
	• வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள முதல் இரண்டு பத்தி வினா விடைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• இலக்கண விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். நிரப்புக நீங்கலாக மற்ற இலக்கண விடைகள் 5 எழுதியிருப்பின் சரியான 4 விடைகளைத் தேர்ந்தெடுத்து மதிப்பெண் வழங்கலாம்.	

	• செய்யுள் பாடல்வரி சரியான விடைகளுக்கு முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• உரைநடைப் பத்தி சரியான விடைகளுக்கு முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• திருக்குறள் கோடிட்ட இடங்களுக்கு முழு மதிப்பெண் வழங்கலாம	
	• செய்யுள் பகுதியில் தகுதி வாய்ந்த சரியான விடைகளுக்குப் பிழையற இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• உரைநடை விடைகள் பிழையற இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• துணைப்பாடம் கதை அமைப்பு மாறாமலும், சிறந்த நடையுடனும் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• படத்திற்குப் பொருத்தமான கருத்துகள் தலைப்புடன் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• கடிதம், கட்டுரை ஆகியவற்றிற்கு ஒட்டு மொத்தமாக மதிப்பெண்கள் வழங்காமல் அவ்வப்பகுதிகளுக்குத் தனித்தனியாக மதிப்பெண்கள் வழங்கியபின் இறுதியாக இடப்பக்கம் வட்டத்திற்குள் மொத்த மதிப்பெண்கள் வழங்க வேண்டும்.	
	• கடிதம் உரிய வடிவமைப்பு முறையில் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• கட்டுரை போதிய துணைத்தலைப்புகளுடன் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	
	• **அதிகபட்ச மதிப்பெண் 80/80 உரிய பிழையற்ற விடைத்தாளுக்கு மட்டுமே வழங்க வேண்டும்**	
	முற்றும்	

	MARKING SCHEME FOR BOARD EXAM	
	2022 - 23 (X std – Tamil)	
	மதிப்பெண் வழங்கும் முறை	
	வகுப்பு : 10 தமிழ் - 006 மொத்த மதிப்பெண்கள் : 80	
	பகுதி – அ (SECTION A)	
	பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக.	
1.அ)	**பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.**	**5 x 1= 5**
i.	இ) பாண்டிய நாட்டில்	
ii.	இ) கல்வெட்டு	
iii.	அ) சோழர்கள்	
iv.	ஆ) கோவில்	
v.	ஈ) வீரமகளிர்களை	
	(அல்லது)	
ஆ)	**பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.**	
i.	அ) சொல்லாராய்ச்சியில்	
ii.	இ) 40 க்கு மேல்	
iii.	ஈ) மறைமலை அடிகளின்	
iv.	ஆ) ஒப்பரிய அறிவு	
v.	அ) தமிழ்	
2. அ)	**பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.**	**5 x 1= 5**
i.	ஆ) 1688	
ii.	ஈ) உலக வரைபடத்தில் இடம்பெறும் அளவுக்கு	
iii.	இ) மெட்ரோபாலிடன்	
iv.	ஈ) 60%	
v.	ஆ) கிழக்கிந்திய கம்பெனியரால்	
	(அல்லது)	
ஆ)	**பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.**	
i.	அ) ஒவ்வொருவரின் கைப்பிடியில்	
ii.	ஆ) வெளிநாட்டுக்கல்வி	
iii.	இ) கல்வி	
iv.	ஈ) கிராமிய உலகம்	
v.	அ) நீண்ட கால	

	SECTION - B	
	பகுதி – ஆ (இலக்கணப் பகுதி)	
3.	**சான்று தருக: (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)**	**4 x 1= 4**
i.	இ) கலங்ங்கு	
ii.	ஆ) முறுக்கு மீசை வந்தார்	
iii.	அ) அப்பா வந்தார்	
iv.	ஆ) நடந்தாய்	
v.	அ) இங்கே உள்ளது	
4.	**கூறியவாறு செய்க : (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)**	**4 x 1= 4**
i.	ஈ) மணி வந்தான்	
ii.	அ) நண்பா வா!	
iii.	ஆ) மாதவி வந்தாள்	
iv.	அ) கோவில் கட்டினான்	
v.	இ) கால் வலிக்கும்	
5.	**இலக்கணக்குறிப்பு தருக : (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)**	**4 x 1= 4**
i.	இ) எதிர்மறைத்தொழிற்பெயர்	
ii.	இ) உவமைத்தொகை	
iii.	ஈ) அடுக்குத்தொடர்	
iv.	ஆ) வழாநிலை	
v.	ஆ) முறை நிரல் நிறைப்பொருள்கோள்	
6.	**நிரப்புக: (அனைத்து வினாக்களுக்கும் விடையளி)**	**4 x 1= 4**
i.	அ) நெட்டெழுத்து ஏழும்	
ii.	அ) ஏழு	
iii.	ஈ) வினைத்தொகை	
iv.	ஆ) வினைமுற்றுத்தொடர்	
	SECTION - C	
	பகுதி - இ (இலக்கியம்)	
7.	**பின்வரும் பாடலைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக.**	**5 x1 = 5**
i.	ஆ) முத்தமிழ்	
ii.	அ) தமிழழகனார்	
iii.	ஈ) சிலேடை	
iv.	ஆ) ஐந்து	
v.	அ) முத்தும் அமிழ்தும்	

8.	**பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.**	**5 x1 = 5**
i.	அ) விருந்தினர்	
ii.	ஆ) தொல்காப்பியர்	
iii.	ஈ) தனித்து உண்ணாமை	
iv.	இ) நல்லோர்	
v.	அ) புறநானூறு	
9.	**பின்வரும் குறட்பாக்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:**	**4 x 1= 4**
	பிழையற்ற முழுமையான விடைகளுக்கு முழுமதிப்பெண் வழங்குக.	
i.	அ) பெரியாரைப்	
ii.	ஆ) இல்லாத	
iii.	இ) இன்மை	
iv.	அ) பொருளாகச்	
10.	**பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:**	**2 x 3= 6**
	பிழையற்ற முழுமையான விடைகளுக்கு முழுமதிப்பெண் வழங்குக.	
i.	• இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உரைத்தன • இடைக்காடனார் இறைவனிடம் "பாண்டியன் என்னை இகழவில்லை • சொல்லின் வடிவாக இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக இருக்கும் உன்னையும் என் புலமையையும் அவமதித்தான்" என்றார்.	
ii.	வித்துவக்கோட்டம்மாவிடம் குலசேகர ஆழ்வார் உரைப்பன • மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். • வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! • நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்.	
iii.	பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழன்னையை • அன்னை மொழியே! அழகான செந்தமிழே! • பழமைக்கும் பழமையான நறுங்கனியே! • குமரிக்கண்டத்தில் அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! • பாண்டிய மன்னனின் மகளே!	

	• எட்டுத்தொகையே! பத்துப்பாட்டே! பதினெண்கீழ்க்கணக்கே! மணிமேகலையே! • இலக்கிய வளம் கொண்டது. • நிலைத்த தன்மை பெற்றது. வேற்றுமொழியார் புகழ் உரைக்கையில் பற்றுணர்வு ஏற்படுகிறது. • வண்டினைப் போல் உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் • **குறிப்பு: (இரண்டு பத்திகளுள் ஏதேனும் ஒரு பத்தியைப் பிழையின்றி எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)**	
iv.	காசிக்காண்டம் கூறும் ஒன்பது விருந்தோம்பல் பண்புகள் • வியந்து உரைத்தல் • நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் • முகமலர்ச்சியுடன் விருந்தினரை நோக்குதல் • வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல் • விருந்தினரின் எதிரில் நிற்றல் • விருந்தினருடன் மனம் மகிழும்படி பேசுதல் • விருந்தினர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல் • விருந்தினர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில்வரை பின்தொடர்ந்து செல்லல் • விருந்தினருடன் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் பண்புகளாகும். **குறிப்பு: (மூன்று கருத்துகளுக்கு ஒரு மதிப்பெண் வீதம் வழங்கலாம்)**	
11.	**எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி:**	**3 x 4= 12**
	பிழையற்ற முழுமையான விடைகளுக்கு முழுமதிப்பெண் வழங்குக.	
i.	மனிதனால் மாசடையும் காற்று	
	• குப்பைகள், நெகிழிப்பைகள், மெதுஉருளைகள் போன்றவற்றை எரிப்பது. • குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டப்பட்ட அறை ஆகியவற்றை மிகுதியாகப் பயன்படுத்துவது.	

	• பட்டாசுகளை மிகுதியாக வெடிப்பது. • புகை வடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குவது. • வானூர்திகள் வெளியிடும் புகை ஆகியவற்றால் காற்று மாசடைகிறது.	
ii.	• நாம் இப்போது செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இருக்கிறோம். • உலகின் பெரும்பாலான தொழில்நுட்ப நிறுவனங்கள் தொழில்நுட்பத்தை உருவாக்குவதிலும், பயன்படுத்துவதிலும், விற்பனை செய்வதிலும் கவனம் செலுத்துகின்றன. • செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால் தரவு அறிவியலாளர்களின் தேவை கூடியுள்ளது. • போட்டி நிறைந்த இவ்வுலகில் யார் முதலாவதாகவும் சரியாகவும் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு வணிகம் வசப்படும். • **குறிப்பு:(செயற்கை நுண்ணறிவு பாடம் தொடர்பான பிற கருத்துகளைத் தொகுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)**	
iii.	• இது மொழிபெயர்ப்பின் காலம். நாளிதழ்களும், தொலைக்காட்சியில் காணும் கேட்கும் செய்திகள் மொழிபெயர்ப்பின் மூலமே கிடைக்கின்றன. • நம் பணிகள் பலவற்றிலும் மொழிபெயர்ப்பின் பணி இருந்து கொண்டே இருக்கிறது. • இன்றைய வளரும் நாடுகளில் அறிவியலை உருவாக்க, அரசியலை உருவாக்க, பொருளியலை உருவாக்க, சமூகவியலை உருவாக்க, இலக்கியத்தை உருவாக்க, மொழிபெயர்ப்பே உதவுகிறது. • காலத்தால் இடத்தால் மொழியால் பிரிக்கப்பட்ட மானுடத்தை இணைக்கிறது. • மொழிபெயர்ப்பு மனிதர்களையும், நாடுகளையும், காலங்களையும் இணைக்கும் நெடுஞ்சாலையாக இருக்கிறது.	
iv.	**கொழுந்து வகை** • துளிர்(அல்லது) தளிர் முறி அல்லது கொழுந்து, குருத்து, கொழுந்தாடை	

	துளிர் அல்லது தளிர் - நெல்,புல் இவற்றின் கொழுந்து **முறி அல்லது கொழுந்து -** புளி,வேம்பு இவற்றின் கொழுந்து **குருத்து** - சோளம், கரும்பு, தென்னை, பனை இவற்றின் கொழுந்து **4. கொழுந்தாடை -** கரும்பின் நுனிப்பகுதி **பூவின் நிலைகள்** • அரும்பு, போது, மலர் அல்லது அலர், வீ, செம்மல் **(எ.கா)** **1. அரும்பு** **-** பூவின் தோற்ற நிலை **2. போது** - பூ விரியத் தொடங்கும் நிலை **3. மலர் அல்லது அலர்** - பூவின் மலர்ந்த நிலை **4. செம்மல்** - பூ வாடிய நிலை **5. வீ** - மரம், செடிகளிலிருந்து பூ விழுந்த நிலை	
v.	• கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி ஆடுபவரின் தலையில் நிற்கும்படிச் செய்வர். • செம்பு தலையில் நிற்க அதில் பச்சரிசியையோ, மணலையோ நிரப்புவர். • ஆண் பெண் இணைந்து ஆடுவர். • நையாண்டி மேள இசையும் நாகசுரமும் இசைக்கப்படும். • **சான்று : சிலப்பதிகாரம் --** குடக்கூத்து (மாதவி ஆடிய 11 வகை ஆடல்) • **நிகழ்த்தப்படும் மாவட்டங்கள் :** திருநெல்வேலி , திருச்சி கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல்.	
12.	**ஏதேனும் ஒன்று பற்றி ஒரு பக்க அளவில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக:**	**1x 7 = 7**
	• முன்னுரை – 1 மதிப்பெண் • துணைத் தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 5 மதிப்பெண் • முடிவுரை – 1 மதிப்பெண்	
	i) கோபல்லபுரத்து மக்கள் - முன்னுரை – அதிகாலை கிராமத்துக் காட்சி – அன்னமய்யா கண்ட காட்சி – அன்னமய்யாவின் செயல் - அன்னமய்யாவின் விருந்தோம்பல் - அன்னமய்யாவின் மனநிறைவு – முடிவுரை.	

	ii) புதிய நம்பிக்கை – முன்னுரை - மேரியின் குடும்பநிலை – மேரிக்குப் பிடித்த சூழல் - மேரியின் விருப்பம் - மேரிஜேன் பெற்ற கல்வி – பட்டமளிப்பு விழா – முடிவுரை.	
	iii) பாய்ச்சல் - முன்னுரை – அழகு கண்ட காட்சி – அனுமார் காட்சி – அனுமார் பாய்ச்சல் - அழகின் அனுமார் ஆட்டம் - முடிவுரை. **குறிப்பு: (மேற்கண்ட தலைப்புகள் தவிர பிற பொருத்தமான தலைப்புகள் இருப்பினும் மதிப்பெண் வழங்குக)**	
13.	**பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**	**3**
	• முப்பது சொற்களுக்குக் குறையாத வருணனையும் (5 தொடர்கள்) தலைப்பும் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். • தலைப்பு – ½ • ஐந்து தொடர்கள் - 2 ½	
	பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா. **பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.** **பொருள் பொருத்தமுடன் தவறின்றித் தொடரில் அமைத்து எழுதியிருப்பின் பழமொழி ஒவ்வொன்றிற்கும் ஒன்றரை மதிப்பெண் வீதம் 3 மதிப்பெண் வழங்குக.**	
14.	i.)அலுவலகக் கடிதம் அனுப்புநர் - ½ பெறுநர் - ½ விளி – ½ பொருள் - ½ உள்ளடக்கம் - 2 முடிப்பு – ½ இடம், தேதி – 1 உறைமேல் முகவரி – ½	**1x 6 = 6**
	(அல்லது)	
	ii.) நட்பு / உறவுமுறைக் கடிதம் இடம், தேதி – 1 விளி – ½ நலம் விசாரிப்பு – ½ உள்ளடக்கம் - 3 முடிப்பு – ½ உறைமேல் முகவரி – ½	

15.	**பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.**	**1x 6 = 6**
	தலைப்பு – ½ முன்னுரை – ½ துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை - 4 மேற்கோள் - ½ முடிவுரை – ½	
	கட்டுரை பிழையின்றி அமையுமாயின் முழுமதிப்பெண் வழங்கலாம்.	
	மொத்த மதிப்பெண்கள் 80/80 வழங்கலாம்	
	முற்றும்	